செய்தி வெளியீடு எண் :14 நாள்: 09.07.2020

**தேனி மாவட்டம்.**
**கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையாக**
**கம்பம் நகராட்சி பகுதியில் வீடுவீடாக மேற்கொள்ளப்பட்டுவரும்**
**மருத்துவ பரிசோதனை பணிகளை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்:-**

*******

தேனி மாவட்டம், கம்பம் நகராட்சி பகுதியில் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையாக, தொற்றா நோய்களுக்கான சிறப்பு நல்வாழ்வு மருத்துவ முகாம் மற்றும் வார்டு வாரியாக ஒவ்வொரு வீட்டிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் மருத்துவ பரிசோதனை பணிகளை இன்று (09.07.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவித்ததாவது,

கொரோனா வைரஸ் காய்ச்சல் (Covid-19) தாக்கத்தினை கட்டுப்படுத்திட மத்திய, மாநில அரசுகள் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டு வருகிறது. கொரோனா தொற்று பரவுதலை கட்டுப்படுத்தும் வகையில், தேனி மாவட்டத்தில் அனைத்து பகுதிகளில் வசித்து வரும் வயது முதியோர்களின் உடல் நலனை பேணும் வகையிலும் தொற்றா நோய்களுக்கான தொடர் சிகிச்சை மேற்கொண்டு வரும் வயோதிகர்கள் குறிப்பாக சர்க்கரை நோய், இரத்தக்கொதிப்பு, இருதய நோய், சிறுநீரக நோய் மற்றும் புற்றுநோய் தொடர்பாக மருத்துவ சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளின் உடல்நிலையினை காலமுறை பரிசோதனை மேற்கொள்ளும் வகையில் கிராமபுறங்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டு மாவட்டம் முழுவதும் நடைப்பெற்று வருகிறது. அதன்படி, இன்றைய தினம் (09.07.2020) கம்பம் நகராட்சி பகுதியில் கம்பம் - போடிமெட்டு சாலையில் உள்ள தனியார் மண்டபத்தில் இம்மருத்துவ முகாம் நடைபெற்றது.

மேலும், கம்பம் நகராட்சி பகுதியில் மொத்தம் 33 வார்டுகள் உள்ளன. தற்சமயம், கொரோனா வைரஸின் தாக்கம் இப்பகுதியில் அதிகரித்து கொண்டேவருவதால், அதனை கட்டுப்படுத்திட மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதில், ஒவ்வொரு வார்டு வாரியாக அப்பகுதியில் வசித்துவரும் பொதுமக்களின் வீடுகளில உள்ள நபர்களுக்கு ஏதேனும் கொரோனா தொற்று உள்ளதா என்பதனை கண்டறியும் வகையில், வீடுவீடாக கொரோனா பரிசோதனை மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, இன்றைய தினம் இப்பணி தொடங்கப்பட்டுள்ளது. இப்பணிக்களுக்கென 10 மருத்துவக்குழுக்கள் நியமிக்கப்பட்டு ஒரு குழுக்களுக்கு 3 நபர்கள் வீதம் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், இப்பரிசோதனையில் பொதுமக்களுக்கு பிராணவாயு பரிசோதனை மற்றும் வெப்பநிலை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, சர்க்கரை நோய், இரத்தக்கொதிப்பு, இருதய நோய், சிறுநீரக நோய் மற்றும் புற்றுநோய் தொடர்பாக ஏதேனும் மருத்துவ -

-சிகிச்சை பெற்றுவருபவரா என்பது குறித்தும் கேட்டறியப்படுகிறது. இப்பரிசோதனையின்போது கொரோனா நோய் தொற்று தொடர்பாக ஏதேனும் அறிகுறிகள் தென்படின், இப்பகுதியில் நடைபெற்றுவரும் மருத்துவ முகாமிற்கு அழைத்து சென்று பரிசோதனை மேற்கொள்ளப்படுவர். மேற்கண்டவாறு நடைபெற்றுவரும் பணிகள் தொடர்பாக இன்றைய தினம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், கொரோனா தொற்று பரவாமல் நம்மை நாம் தான் பாதுகாத்து கொள்ள வேண்டும் என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். பொதுமக்கள் தேவையற்ற காரணங்களுக்காக வெளியே செல்வதை தவிர்த்து, அத்தியவசிய தேவைகளுக்காக மட்டுமே வெளியில் செல்ல வேண்டும். வெளியே செல்லும் போது கட்டாயம் முககவசம் அணிவது, வீட்டிற்கு நுழைவதற்கு முன் கிருமி நாசினி திரவம் கொண்டு கைகளை நன்கு கழுவுவது, சமூக இடைவெளியை கடைபிடிப்பது மற்றும் சுற்றுப்புறப்பகுதிகளை சுகாதாரமாக வைத்து கொள்வது போன்ற நடவடிக்கைகளை சரிவர மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக கொரோனா அறிகுறிகள் தென்படும் நபர்கள், தாங்களாகவே மருந்தகங்களுக்கு சென்று மருந்துகளை வாங்கி உபயோகப்படுத்தாமல், அருகில் உள்ள அரசு மருத்துவமனை மற்றும் சுகாதார நிலையங்களை அணுகி மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டும். மேற்கண்ட நடைமுறைகளை சரிவர கடைபிடித்து, கொரோனா தொற்றினை முற்றிலும் தவிர்த்திட பொதுமக்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என தெரிவித்தார்.

முன்னதாக, உத்தமபாளையம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கம்பம், கூடலூர், சின்னமனூர் ஆகிய நகராட்சி ஆணையாளர்கள் மற்றும் உத்தமபாளையம் பேரூராட்சி செயல் அலுவலர், சுகாதாரா அலுவலர் ஆகியோர்களுடன் கொரோனா நோய் தடுப்பு குறித்து மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில் கட்டுப்படுத்த பகுதிகள் மற்றும் அப்பகுதிகளில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்களின் நிலை மற்றும் அப்பணிக்கென நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் ஆகியன குறித்தும் அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் சுகாதார நவடிக்கைகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின் போது, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.செந்தில்குமார், உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) இ.கார்த்திகாயினி, வட்டாட்சியர் உதயராணி, கம்பம், கூடலூர், சின்னமனூர் ஆகிய நகராட்சி ஆணையாளர்கள் மற்றும் உத்தமபாளையம் பேரூராட்சி செயல் அலுவலர், சுகாதாரா அலுவலர், மருத்துவ அலுவலர்கள், மருத்துவர்கள், பணியாளர்கள், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**